

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.6.2024) முகாம் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக வழக்கறிஞர் அணித் தலைவர் செல்வராஜ் ஆகியோரின் மகன் திலீபன் – ஜனனி புதுமண தம்பதியினர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி. அவர்கள், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, எம்.எல்.ஏ. அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் – திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் மகன் எஸ்.கே.திலீபன் – ஆர்.ஜி.ஜனனி இணையரின் திருமணத்தை திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடத்தி வைத்தார். இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வபெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்ட அனைத்துக் கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

### குடியரசுத் தலைவர்

# திருமதி திரவுபதி முர்மு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜீன் 21-

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களின் பிறந்த நாளான நேற்று, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல் நலனோடு பெரு வாழ்வுவாழ்ந்திடவேண்டுமென வாழ்த்தியுள்ளார்.

இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை யொட்டிதமிழ்நாடுமுதலமைச்சர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.**

**நமது குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல்நலனோடும், மகிழ்ச்சியோடும், மனநிறைவளிக்கும் பெருவாழ்வினை வாழ விழைகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# அனைத்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜீன் 21-**

**இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் (18-6-2024) கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மீனவர்களை உடனடியாக விடுவிக்க ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (19-6-2024) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து INDTN08MM05 என்ற பதிவு எண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 18.6.2024 அன்று கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய சம்பவங்கள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதோடு மட்டு மல்லாமல், மீனவ சமுதாயத்தினரிடையே அச்ச உணர்வையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்துவதாகவும் கவலைபடத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் தற்போது 15 மீனவர்களும், 162 மீன்பிடிப் படகுகளும் உள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர் களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கள்ளக்குறிச்சி சம்பவம்: பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்!

# உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் அறிவிப்பையொட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் வழங்கினார்!

விழுப்புரம், ஜுன் 21-

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்த சம்பவத்தை கேள்விப்பட்ட தமிழக முதல்வர் கழக தலைவர் நேற்றைய தினம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ. வேலை மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்து மருத்துவர்கள் உடனடியாக அனைத்து வகையான சிகிச்சைகள் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி சென்றார்கள், அதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர் கள்ளச் சாராயத்தால் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூபாய் 10 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் சிகிச்சை பெறுவதற்கு ரூபாய் 50 ஆயிரம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் தறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களை ஆறுதல் அளித்து மருத்துவரிடம் உரிய சிகிச்சை முறைகள் கேட்டறிந்து மேற்கொண்டு சிகிச்சைகள் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வின்போது அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், எம்.எல்.ஏ.க்கள் வசந்தம் க. கார்த்திகேயன், தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் மருத்துவர்கள் அரசு அதிகாரிகள், மாவட்ட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர்,கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் பொதுப் பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வரும் நபர்களை பார்வையிட்டு ஆறுதல் கூறி,சிகிச்சையில் உள்ள நபர்களுக்கு அனைத்து விதமான உயர் சிகிச்சைகளை மேற்கொள்ள மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அருகில் எம்.எல்.ஏக்கள் வசந்தம் க.கார்த்திகேயன்,தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மற்றும் மருத்துவர்கள்,அரசு அதிகாரிகள் மாவட்ட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை

# முழுமையாக தடை செய்ய அரசு கடும் நடவடிக்கை!

## அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

கள்ளக்குறிச்சி ஜுன் 21-

கள்ளக்குறிச்சியில் கள்ள சாராயம் குடித்து பாதிக்கப்பட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் தமிழக அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்கள்.

இதன் பின்னர் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டியில் கூறி இருப்பதாவது, கள்ளக்குறிச்சியில் நடக்க கூடாத சம்பவம் நடந்துள்ளது. இது மிகவும் வருத்தத்துக்குரியது. சாராயம் குடித்து பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் 74 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனை, விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனை, புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் 6 பேர் இறந்துள்ளனர். சேலம் மருத்துவமனையில் 3 பேர், புதுவை ஜிப்மரில் 3 பேர், முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் ஒருவர் என மொத்தம் 13 பேர் இறந்துள்ளனர். மேலும் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு என்ன வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என விவரங்கள் கேட்டு அறியப்பட்டுள்ளது.

தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மெத்தனால் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட வகையில் சாராய வியாபாரி கண்ணுக்குட்டி, அவரது தம்பி தாமோதரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு யாரேனும் இவர்கள் மூலமாக மெத்தனால் வாங்கி சென்று விற்பனை செய்து வருகிறார்களா என்று குறித்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இது குறித்து தகவல் அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் மா.சுப்ரமணியன் மற்றும் என்னை விரைந்து செல்லுமாறு உத்தரவிட்டார். அதன் பேரில் வந்து விசாரித்தோம். சேலம், முண்டியம்பாக்கம், புதுவை ஆகிய மருத்துவமனையில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்குமாறு சுகாதாரத் துறை அமைச்சர் அந்தந்த மருத்துவமனையை தொடர்ந்து அறிவுறுத்தி கொண்டு உள்ளார். கள்ளக்குறிச்சியில் 9 பேர் அபாயகர சூழ்நிலையில் இருந்து வருகின்றனர்.

அவர்களுக்கு போதிய தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் சிகிச்சை அளிக்க சேலம், திருச்சி,விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மருத்துவக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். மேல் சிகிச்சைக்கு அனுப்ப 108 ஆம்புலன்ஸ் 32 தயார் நிலையில் மருத்துவமனையில் உள்ளது.போலீசாரின் மெத்தன செயல்பட்டால் கள்ளக்குறிச்சி எஸ்.பி. உள்ளிட்ட அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

கள்ளச் சாராயத்தை முழுமையாக தடை செய்ய தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்கும், கள்ள சாராயம் விற்பனை செய்தால் பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன், எம்.எல்.ஏ.க்கள் வசந்தம் கார்த்திகேயன், தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட ஆட்சியர் ஷர்வன் குமார் வருவாய் அலுவலர், சத்தியநாராயணன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் நேரு, மாவட்ட சேர்மன் புவனேஸ்வரி பெருமாள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### விரல்ரேகை ஒப்பீடு செய்து

# ஆவணங்கள் பதிவின்போது - ஆள்மாறாட்டத்தைத் தடுக்கும் வசதி!

## வணிகவரி - பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜுன் 21-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று (20.06.2024) சென்னை அண்ணாசாலை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி (ம)பதிவுத்துறை வளாகத்தில் உள்ள தென் சென்னை, இணை 1, சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவின்போது விரல் ரேகை ஒப்பீடு செய்துஆள் மாறாட்டத்தை தடுக்கும் மேம்படுத்தப்பட்ட வசதியை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி பதிவுத்துறையில் போலி ஆவணப்பதிவினை தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பதிவுக்கு தாக்கல்செய்யப்பட்ட ஆவணப்பதிவு குறித்த விழிப்புணர்வு செய்தியினை முன் ஆவணதாரருக்கு குறுஞ்செய்தியாக அனுப்பிடும் வசதி மற்றும் எழுதி கொடுப்பவர்/ எழுதி வாங்குபவரது விரல்ரேகை,

ஆதார் மற்றும் கருவிழிப்படல தரவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்ப்பதன்

மூலம் தவறான ஆவணப் பதிவுகள் தடுக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் ஆள்மாறாட்டத்தை முற்றிலும் தவிர்க்கும்நோக்குடன் ஒரு நபர் சொத்தை விற்கும் போது (Executant/Seller) தனது சொத்து விற்பனையை ஒத்துக்கொள்ளும் முகமாக சார்பதிவகத்தில் விரல் ரேகையைபதிவு செய்யும் போது இந்த சொத்து தொடர்பாக முந்தைய ஆவணப்பதிவின் போது சொத்து உரிமையாளர் (Claimant/Buyer) நிலையில் அவரிடம் பெறப்பட்ட விரல்ரேகையுடன் ஒப்பிட்டு, இரண்டு விரல் ரேகைகளும் ஒத்திருக்கும் பட்சத்தில் மட்டுமே பதிவுக்கு ஏற்கும் வண்ணம்ஸ்டார் 2.0 மென்பொருளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு பொருந்தாத நிகழ்வுகளில் சார்பதிவாளர் ஆவணப்பதிவின் உண்மை நிலையை விசாரித்து பதிவினைமேற்கொள்ளும் வண்ணம் மென்பொருள்வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மேம்படுத்தப்பட்ட வசதியின் மூலம் ஆவணப்பதிவில்ஆள்மாறாட்ட மோசடி முற்றிலும் தவிர்க்கப்படுவதுடன், பொதுமக்களின் சொத்துக்களும் பாதுகாக்கப்படுவதை பதிவுத் துறை உறுதி செய்கிறது.

இந்தவிரல்ரேகை ஒப்பீடு செய்து ஆள்மாறாட்டத்தை தடுக்கும் வசதி 13.2.2018க்குப் பிந்தைய ஆவணங்களுக்கு மட்டுமேபொருந்தும் எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்நிகழ்ச்சியில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன்,

பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும்

பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வாலாஜா சாலை சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் 2024– 2025 ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் உத்தேச அறிவிப்புகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்/ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர்.க.மணிவாசன் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி. ஆகியோர் கலந்து கொண்டனர்.